LIGHT DISPELS DARKNESS

# யா/ உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி


## வல்வெட்டித்துறை



# பரிசளிப்பு விழா - 2012

## அதிபர் அறிக்கை

# யா/உடுப்பிட்டி
# அமெரிக்கன் மிஷன் கல்லூரி




# பரிசளிப்பு விழா - 2012

**07.07.2012**

# கல்லூரித் தாயின் அஞ்சலி



எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு அயராது உழைத்த
கல்லூரியின் பழைய மாணவனும் கொழும்பு பல்கலைக்கழக
கணனி விஞ்ஞானபீட மாணவனுமாகிய
அமரர் த.கிரிதரன் அவர்களுக்கு எமது
கல்லூரித் தாய் சிரம் தாழ்த்தி கண்ணீர்ப்பூக்களைக்
காணிக்கையாக்குகின்றாள்.



**Principal**
**Mr.Kanapathippillai Tharmalingam**




**Deputy Principal**

**Mrs.Vallipillai Kailayangiriselvam**



**Chief Guest**
**Mr. Yogasamy Raveendran**
(Deputy Director of Education, Jaffna Zone)



**Deputy Principal**
**Mr.Anantharajah Vimalarajah**



எமது கல்லூரியின் ஆசிரியர் குழாம் - 2011

# எமது கல்லூரியின் சாதனை மாணவர்கள்

2011 ம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த (உ.த) பரீட்சையில் அதி சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள்



செல்வன்
கமலக்கண்ணன் கமலவாசன்
கணிதப்பிரிவு - 3A
தேசியநிலை - 01
மாவட்டநிலை - 01



செல்வன்
கிருஷ்ணகுமார் தனிரோஜன்
கணிதப்பிரிவு - 3A
தேசியநிலை - 15
மாவட்டநிலை - 02



செல்வி
இ. புவிப்பிரபா
வர்த்தகத்துறை
2A 1C

# அதிபர் அறிக்கை

எமது கல்லூரியின்2012 ஆம் வருட பரிசில் தின விழாவிற்கு வருகை தந்திருக்கும் பெருமதிப்பிற்கும் அன்புக்குமுரிய பிரதம விருந்தினர் யாழ் வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் உயர்திரு.யோக சாமி ரவீந்திரன் அவர்களே! அவர் தம்துணைவியார் திருமதி.ஜெய ர்ராணி ரவீந்திரன் அவர்களே! வணக்கத்திற்குரிய மதகுருமார்களே! எமது வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களே! பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே! உதவிக்கல்விப் பணிப்பாளர்களே! அன்புக்குரிய அதிபர்களே, ஆசிரிய ஆலோசகர்களே! அன்பான ஆசிரியர்களே! கல்விசாரப்பணியாளர்களே! எமது கல்லூரியின் சொத்தாகத் திக ழும் அன்புக்குரிய மாணவர்களே!கல்லூரியின் அபிவிருத்திச்சங்கத் தினரே! கல்லூரியின் அச்சாணியாகத்திகழும் பழைய மாணவர் சங்கத்தினரே! நலன் விரும்பிகளே! பெற்றோர்களே! உங்கள் அனை வருக்கும் எமது அன்பான மாலை வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது பிரதம விருந்தினர் அவர்கள் வடமராட்சியில் சிறப்பு மிகு பிரதேசமாக விளங்கும் உடுப்பிட்டியில் பிறந்தார். இவர் தரம் 01 இலிருந்து தரம் 08 வரை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும், தரம் 09 இலிருந்து க.பொ.த உயர்தரம் வரை யா/ஹாட்லிக் கல்லூரியில் தனது கல்வியைக்கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு பௌதிக விஞ்ஞானப்பிரிவிற்கு தெரிவானார். 1985 இல் விஞ்ஞான மாணிப்பட்டத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறினார்.

1987-12-14 இல் தன்னை ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொண்ட இவர் யா.சிதம்பராக்கல்லூரி, யா\செம்பியன்பற்று அ.த.க பாடசாலை, யா/அம்பன் அ.மி.த பாடசாலை ஆகிய பாடசாலை களில் தனது சேவையை சிறப்பாக ஆற்றினார். கணிதபாடத்திலும் ,பௌதிகவியல் பாடத்திலும் ஆழ்ந்த புலமையுடைய இவர் ஏனைய சகல துறைகளிலும் மிகவும் சிறந்த அறிவுடையவரானார்.

1999.01.04 இல் இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு (SLEAS - III) தெரிவு செய்யப்பட்டார். இவர் கல்வி அபிவிருத்தி, திட்டமிடல், நிர்வாகம் போன்ற பிரிவுகளில் யாழ்ப்பாண வலயத்தில் சிறப்பாக கடமையாற்றியுள்ளார். 2010. 06.06 இலிருந்து இலங்கையின் நிர்வாக சேவை (SLEAS - II) இற்கு பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

தனது நிர்வாகத்திற்குட்பட்ட பாடசாலைகளின் பௌதிக வளம், ஆளணிவளம் பற்றிய தகவல்களில் துல்லியமான அறிவுடை

யவராவார். இதனால் யாழ்ப்பாண கல்வி வலயத்தின் உயிரோட்டமான செயற்பாட்டிற்கு சிறப்பான பங்களிப்பைச் செய்துள்ளார். எமது பிரதேசத்தில் தன்னை உருவாக்கிய கல்லூரிகளில் பெரும் மதிப்பு வைத்திருப்பதோடு ஏனைய பாடசாலைகளின் விடயங்களையும் துல்லியமாக அறிந்து வைத்திருப்பது சிறப்பான ஒரு விடயமாகும். நல்ல ஆலோசனைகளை சுருக்கமான முறையில் வழங்கி கல்லூரிகளை உற்சாகப்படுத்தும் இவரின் குணவியல்புகள் சிறப்பான அம்சமாகும். இப்படிப்பட்ட ஒரு சிறந்த மேன்மையாளரை, எமது கல்லூரியின் மைந்தனை இவ்வாண்டிற்கான பரிசில் வழங்கும் நாளிற்கு பிரதம விருந்தினராக அழைத்து ஆண்டறிக்கையைச் சமர்ப்பிப்பதையிட்டு எமது கல்லூரி சமுகம் பெருமகிழ்வடைகின்றது.

எமது கல்லூரியில் ஆசிரியர்வள அணி, பௌதிகவள அணி என்பவற்றில் அதிகளவு பற்றாக்குறை காணப்படுகின்றது. எனினும் மாணவர்களின் கல்வியின் தரத்தை கூட்டுவதில், எமது ஆசிரியர்கள் விருப்போடு செயற்படுவது ஒரு சிறப்பான விடயமாகும். எமது கல்லூரி மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு பலர் உள்ளேயும் வெளியேயும் இருந்து பங்காற்றிக் கொண்டிருக்கின்றனர். என்பது பாராட்டுக்குரிய விடயமாகும். எமது கல்லூரியின் கல்வித்தரத்தையும், பெறுபேறுகளையும் இன்னும் உயர்த்துவதற்கு எமது கல்வி வலயத்தின் பணிப்பாளர், பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், அவர்களது ஆளணியினரதும் செயற்பாடுகள் மெச்சத்தக்கவையாகும். எமது கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயற்பாடுகளுடன் நிர்வாக ஒழுங்குகளுக்கு சிறந்த ஒத்துழைப்பாகும்.

கல்வி மேம்பாட்டிற்கான கல்லூரியின் தேவைகளுக்கு எந்நேரமும் உதத் தயராக இருக்கும் பழைய மாணவர் தாய்ச்சங்கத்தின் தலைவர் திரு. க. சண்முகசுந்தரம் அவர்களுக்கும், மற்றும் உறுப்பினர்களுக்கும் எனது நன்றியையும், பாராட்டையும் தெரியப்படுத்துகின்றேன். கொழும்பு, கனடா, சுவிற்சலாந்து, அவுஸ்ரேலியா, இங்கிலாந்து போன்ற இடங்களில் செயற்பட்டுவரும் எமது பழைய மாணவர் சங்கங்கள், கல்லூரியின் தேவைகளை தொலைபேசிமூலம் என்னிடம் கேட்டு, தாய்ச்சங்கமூலம் செய்யும் உதவிகள் போற்றத்தக்கன. எமது கல்லூரியில் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாது இருந்த குடிநீர்ப்பிரச்சனையை, (கல்லூரிக்கும், விளையாட்டு மைதானத்திற்கும்) சுவீஸ் பழைய மாணவர் சங்கம் பொறுப்பெடுத்து நிறைவேற்றியுள்ளது. அவர்களுக்கும் எனது பாரட்டுக்களையும், நன்றியையும் தெரிவிப்பதில் பெருவகையடைகின்றேன்.

எமது கல்லூரியின் பழைய மாணவர்க சங்ககங்களின் சர்வ தேச இணைப்பாளர் கலாநிதி த.வசந்தகுமார், சர்வதேச இணைப் பாளர் திரு. சி. கணபதிப்பிள்ளை ஆகியோர் கல்லூரியின் நிலைமை களை அடிக்கடி விசாரித்து எனக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கி செயற்பட்டுக் கொண்டிருப்பது பாராட்டுக்குரிய விடயமாகும். மேலும் திரு. வே. ஞானேஸ்வரன் அவர்கள் அடிக்கடி கல்லூரியின் நிலைமைகளைக் கேட்டறிந்து அதற்குரிய பரிகாரங்களைக் காண் பதில் தங்கள் சுவீஸ் கிளைக்கு அழுத்தம் கொடுப்பது சிறப்பான விட யமாகும். மேலும் தனது தந்தையாரும் இக்கல்லூரியின் ஆசியாரு மான பண்டிதர் வேலுப்பிள்ளை அறக்கட்டளை உருவாக்கி கஷ்ட மான பிள்ளைகளின் இடைநிலைக் கல்வி உயர்கல்வி உயர்வடைய செயற்பட்டுக் கொண்டிருப்பது மிகவும் உயர் மகத்துவம் கொண்ட செயற்பாடாகும்.

தேசிய ரீதியில் க.பொ.த (உ/த)த்தில் கணிதத்துறையில் முதல் நிலை மாணவனாக வந்த செல்வன் கமலக்கண்ணன் கமலவாசன், மாவட்ட நிலையில் 2 ஆம் இடம் வந்த மாணவன் செல்வன் கிருஷ்ண குமார் தனிரோஜன், திறமையான பெறுபேறுகள் பெற்ற மற்றைய மாணவர்கள் அ.சஜீபன், சி.பிரதீப் ஆகியோரையும் அவர்களைக் கற் பித்த ஆசிரியர்களையும் கௌரவித்து பாராட்டி அன்பளிப்புக்கள் செய்த. கனடா, சுவீஸ், அவுஸ்ரேலியா, கொழும்பு பழைய மாணவர் சங்கத்திற்கும் எமது கல்லூரியின் தாய்ச் சங்கத்திற்கும் பாராட்டுக் களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் பல பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் எமது கல்லூரி மாணவர்களுக்கு இத்தருணத்தில் பரிசில்கள் வழங்கிச் சிறப்பிபதற்கு நிலையான நிதி வைப்புக்கள் வங்கியில் செய்துள்ளனர் அவர்களுக்கு எமது 'நன்றிகளை தெரியப்படுத்துகின்றோம். இவ்வாறக எமது கல்லூரியின் பழைய மாணவர்களது செயற்பாடுகள் எமது கல்லூரிக்கு பெருமை சேர்க்கும் விடயங்கள் என அறிக்கை சமர்ப்பிப்பதில் பெரு மகிழ்ச்சி அழைக்கின்றேன்.

# மாணவர் விபரம்

| | |
|---|---|
| ஆரம்ப பிரிவு | 289 |
| இடைநிலைப் பிரிவு | 505 |
| உயர்தரப் பிரிவு | 361 |
| மொத்தம் | 1155 |

## ஆளணி விபரம்

| | |
|---|---|
| பட்டதாரி ஆசிரியர்கள் | 26 |
| பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் | 26 |
| பயிற்சி பெறாத ஆசிரியர்கள் | 1 |
| உள்ளகப் பயிற்சி ஆசிரியர்கள் | 5 |
| கல்வி சரா பணியாளர்கள் | 4 |

## புதிதாக ஆளணியில் இணைந்தவர்கள்

1. திருமதி. கௌ. விஜேந்திரன்
2. திருமதி. கோ. மயூரநாதன்
3. திரு. த. ராமதாஸ்
4. திரு. மா. அசோக்குமார்
5. திருமதி. ச. பாலேந்திரன்
6. செல்வி. அ. சிவகுமார்
7. திருமதி. சு. மணிமாறன்
8. திருமதி. ஜெ. ரவீந்திரன்
9. திரு. மா. லோகசிங்கம்
10. திருமதி. வ. ரமேஸ் (தற்காலிகம்)
11. திரு.சி.கதிரவேலு
12. திரு.க.யோகேந்திரன்

## இடமாற்றம் பெற்றுச் சென்றோர்.

1. திரு. க. கனகேஸ்வரன்
2. திரு. சி. தவராஜ்
3. செல்வி. ஜெ. மீரா
4. திருமதி. தெ. பாலறஞ்சன்.
5. செல்வி. சி. சிந்துஜா
6. திரு. சி. மகேஸ்வரன்
7. திருமதி. ர. நந்தன்
8. செல்வி அ. ஜெயறதி
9. திரு. சி. பிரணவ சொரூபன்
10. செல்வி ந.கார்த்திகா

## ஓய்வு பெற்றுச் சென்றோர்.

திருமதி. ச. சச்சிதானந்தம் (பகுதித்தலைவர்)

## கல்லூரி எதிர்நோக்கும் இடர்கள்

1. ஆரம்பிரிவு, இடைநிலைப்பிரிவு வகுப்புகளிற்கு போதிய வகுப்பறைகள் இல்லாது தற்காலிக கொட்டகைகளில் கஷ்டங்களில் மத்தியில் கற்றல் கற்பித்தல் மேற்கொள்ளப் படுகின்றமை

2. நிர்வாக ஒழுங்குகளை சிறப்பாக மேற்கொள்வதற்கான வசதிகள் (இடவசதி) கொண்ட காரியாலயம் இன்மை.

3. ஆய்வு கூடங்களில் செயன்முறைகளினை (Pracctikals) மேற்கொள்வதற்கு வேண்டிய உபகரணங்கள் இராசாயனப் பொருட்கள் பற்றாமை.

4. மாணவர்களிற்கு வழிபாட்டிற்குரிய பிரார்த்தனை மண்டபம் இல்லாமை

## கல்விச் செயற்பாடுகள்

2011 ஆம் ஆண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள்.

1. இரங்கநாதன் - வாகேஸ்
2. தர்மசீலன் - கலியுகன்
3. ரவீந்திரன் - ரஜீவன்
4. யோகதுரை - ரஞ்சித்குமார்
5. நவரத்தினம் - ஆர்த்திகன்
6. இராஜேஸ்வரன் - சாருஷன்

2011 ஆம் க.பொ.த. (சா.த) பரீட்சையில் அதிசிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள் தமிழ் மொழிமூலம்

## தமிழ்மொழிமூலம்

| | | | |
|---|---|---|---|
| 1. சி. கஜுசாந் | 5A | 2B | 2C |
| 2. சி. நிலக்ஜன் | 4A | 3B | 1 C |
| 3. சி. நரேஸ் | 4A | 3B | 2C |
| 4. க. செந்தூரன் | 4A | 2C | 3S |
| 5. இ. கீர்த்தனன் | 3A | 5B | 1 C |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. சி. அஜித் | 3A | 3B | 2S | |
| 7. சி. றஜித் | 3A | 2B | 1C | 1S |
| 8. உ. ஐங்கரன் | 3A | 3C | 1S | |

### ஆங்கில மொழிமூலம்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. செல்வன் ஜெ. ராஜேந்தர் | 7A | 1B | 1C | |
| 2. ஜெ. அனந்தகுமார் | 3A | 3B | 3C | |
| 3. அ. மதிசுதன் | 3A | 3B | 2C | 1S |
| 4. தி. தர்சன் | 3A | 3B | 1C | 2S |

### உயர்தரம் கற்பதற்கு தகுதி பெற்ற மாணவர்கள் தொகை :-

### 2011 ஆம் ஆண்டு க.பொ.த (உ.த) பரீட்சை சித்திகள்

| | |
|---|---|
| தோற்றியோர் எண்ணிக்கை | - 76 |
| பல்கலைக் கழக அனுமதி பெற்றோர் தொகை | - |
| சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்கள் | - 53 |

### கணிதத்துறை

| | |
|---|---|
| 1. செல்வன் கமலக் கண்ணன் - கமலவாசன் (தேசியமட்டம் - 1, மாவட்ட மட்டம் -1) | 3A |
| 2. செல்வன் கிருஸ்ணகுமார் - தனிறோஜன் (மாவட்ட மட்டம் - 2) | 3A |
| 3. செல்வன் அ. சஜீவன் | 2A 1B |
| 4. செல்வன் சி. பிரதீப் | 1A 2B |
| 5. செல்வன் ப. ஜெயரூபன் | 1A 1B 1C |

### விஞ்ஞானத்துறை

| | |
|---|---|
| செல்வன் ந. நவப்பிரசாந் | 1A 2B |
| செல்வன் சி. சர்மிலன் | 3B |
| செல்வி ம. கோபிகா | 1B 2C |

### வர்த்தகத் துறை

| | | | |
|---|---|---|---|
| 1. செல்வி இ. புவிப்பிரபா | 2A | - | 1C |

| | | | | |
|---|---|---|---|---|
| 2. செல்வன் மு. வேணுகானன் | | 1B | 2C | |
| 3. செல்வன் கு. வேணுகோபு | 1A | 1B | 1C | |
| 4. செல்வன் அ. பிரதாப் | 1A | 1B | 1C | |
| 5. செல்வன் சி. சஞ்சீவன் | 1A | 1B | 1C | |

கலைத்துறை

| | | | | |
|---|---|---|---|---|
| 1. செல்வி பி. பிரதீபா | 2A | 1B மாவட்ட நிலை 8 | | |
| 2. செல்வி. சா. திவ்யா | 3A | | | |
| 3. செல்வன் இ. அகிலரூபன் | 1A | 2B | | |
| 4. செல்வன் செ. நிரோஜன் | 1A | 2B | | |
| 5. செல்வன் ர. பிரதீபன் | 1A | 2B | | |
| 6. செல்வன் பு. சிரஞ்சீவ் | 1A | 1B | 1C | |
| 7. செல்வி ப. விநோதிகா | 1A | 1B | 1C | |
| 8. செல்வன் ச. சபேசன் | 1A | 1B | 1C | |
| 9. செல்வி த. தர்சினி | 1A | 2B | | |
| 10. செல்வி. பெ. சிறீஜீவராணி | 1A | 2B | | |
| 11. செல்வி ஜீ. அமல்ராஜ் | 2A | 1B | | |
| 12. செல்வன் மோ. நிரோஜன் | 2A | | 1C | |
| 13. செல்வன் சு. வெங்கடேஸ்வரன் | 2A | 1B | | |
| 14. செல்வன் இ. ஜெசீந்தன் | 2A | 1C | | |
| 15. செல்வன் த. கவிரதன் | 1A | 2B | | |
| 16. செல்வி. ப. ஜெனோசா | | 2A | | 1C |

க.பொ.த உயர்தரப் பரீட்சை பாட ரீதியான சித்தி வீதம்

| பாடம் | சித்தி வீதம் |
|---|---|
| 1. பௌதிகவியல் | 88% |
| 2. இரசாயனவியல் | 75% |
| 3. இணைந்த கணிதம் | 82% |
| 4. உயிரியல் | 100% |
| 5. அளவையியலும் விஞ்ஞானமுறையும் | 90% |
| 6. புவியியல் | 75% |

| | |
|---|---|
| 7. நாடகமும் அரங்கியலும் | 100% |
| 8. இந்து நாகரிகம் | 100% |
| 9. தமிழ் | 97% |
| 10. சித்திரம் | 88% |
| 11. கணக்கீடு | 58% |
| 12. வணிகக்கல்வி | 58% |
| 13. பொருளியல் | 75% |
| 14. கர்நாடக சங்கீதம் | 100% |
| 15. கிறிஸ்தவம் | 50% |

**வலய மட்ட சாதனைகள்**

**தமிழ்த்தினப் போட்டி**

| | | |
|---|---|---|
| 1. நாட்டார் பாடல் | குழு இசை | 2ம் இடம் |
| 2. ர. ராகவேந்தன் | தனி இசை | 2ம் இடம் |

**கணித புதிர்ப்போட்டி**

| | |
|---|---|
| 1. ஜெ. ராஜேந்தர் | 1ம் இடம் |
| 2. சு. வரதராஜன் | 1ம் இடம் |
| 3. கு. ஜனன்சன் | 3ம் இடம் |
| 4. க. கஜிராஜ் | 2ம் இடம் |

**மாகாண மட்ட கணித புதிர்ப்போட்டி**

ஜெ.ராஜேந்தர் 2ம் இடம்

**விஞ்ஞான வினாடி வினாப் போட்டி**

த. கார்த்திபன் ஆங்கில மொழி மூலம் 3ம் இடம்

**ஆங்கில தினப் போட்டி**

த. கார்த்திபன் 2ம் இடம்
த. தேனுஜன் 1ம் இடம்

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் இளம் கண்டு பிடிப்பாளர்களிற்கான தேசிய மட்டப் போட்டியில் பரிசு பெற்றோர்.

1. ப. மதுசன் தரம் 9
2. இ. ஐதுசன் தரம் 9
3. த. கஜவதனன் தரம் 6

} வெண்கலப் பதக்கம்

4. சி. ஜனகன் தரம் - 9
5. வி. குணாளன் தரம் 9
6. ச. குமணன் தரம் - 9
7. அ. அட்சரன் தரம் - 8

} சான்றிதழ்

## இணைபாட விதானச் செயற்பாடுகள் - 2011

### விளையாட்டுக்கள்

பொறுப்பாசிரியர் : - திரு. கி. பாக்கியநாதன் (உடற்கல்வி)

பெருவிளையாட்டுக்கள் : -

கல்வித் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகள்

| பிரிவு | நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் |
|---|---|---|---|---|---|
| UN 15 | கரப்பந்து | 1ம் இடம் | 1ம்இடம் | 2ம் இடம் | பங்குபற்றியது |
| UN 17 | கரப்பந்து | 1ம் இடம் | பங்குபற்றியது | | |
| UN 19 | கரப்பந்து | 1ம் இடம் | 4ம் இடம் | | |
| UN 15 | சதுரங்கம் | 3ம் இடம் | 6ம் இடம் | | |
| UN 19 | சதுரங்கம் | 2ம் இடம் | 5ம் இடம் | | |

கரம், எல்லே போன்ற விளையாட்டுக்கள் வலய மட்டத்தில் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## மெய்வல்லுனர் போட்டிகள் - 2011

| பிரிவு | பெயர் | நிகழ்ச்சி | வலயம் | மாவட்டம் | மாகாணம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|---|
| 11 | சி. பானுஜன் | 75m | 1ம் இடம் | 1ம் இடம் | 4ம் இடம் | |
| 11 | சி. பானுஜன் | 100m | 1ம் இடம் | 1ம் இடம் | 2ம் இடம் | |
| 19 | வே. குகன் | 800m | 1ம் இடம் | 1ம் இடம் | 2ம் இடம் | ப.பற்றியது |
| 19 | வே. குகன் | 1500m | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | |
| 19 | வே. குகன் | 5000m | 1ம் இடம் | 1ம் இடம் | | |
| 19 | தி. கோபிராஜ் | நீளம் | 1ம் இடம் | 2ம் இடம் | 4ம் இடம் | |
| | | மு.பாய்தல் | 1ம் இடம் | 3ம் இடம் | 3ம் இடம் | 2ம் இடம் |
| 19. | இ. நிமலேந்திரா | குண்டு | 1ம் இடம் | 1ம் இடம் | 1ம் இடம் | 2ம் இடம் |

### இவற்றை விட

- கடந்த வருடம் D.S.I சுப்பர் ஸ்போட்ஸ் நடாத்திய கரப்பந்தாட்ட வெற்றிக்கிண்ண சுற்றுத் தொடரில் எமது கல்லூரி 12, 14, 18 வயதுப்பிரிவினர் மாவட்டமட்டத்தில் பங்குபற்றி தேசியமட்டப் போட்டிக்கு தெரிவாகியது குறிப்பிடத்தக்கது.

- கடந்த வருடம் இலங்கை சதுரங்கச் சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட மாவட்டப் போட்டியில் எமது கல்லூரி தரம் 8 மாணவன் செல்வன் சுதாகரன் சுதர்சன் 7 போட்டிகளில் 5 போட்டியில் முதன்மை பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றதுடன் தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார். இவ்வீரர் தினக்குரல் நடாத்திய சதுரங்கப் போட்டியில் பங்குபற்றி எமது கல்லூரிக்கு பெருமை அளித்துள்ளார் என்பதை இவ்விடத்தில் தெரிவிக்கின்றோம்.

- யாழ்மாவட்ட சதுரங்கச் சம்மேளனம் நடாத்திய மாவட்டச் சதுரங்கப் போட்டியில் தரம் 6 ஐச் சேர்ந்த செல்வன் கிருஷ்ணசாமி கஜந்தன் 1ம் இடத்தைப் பெற்றுள்ளார்.

- கடந்த வருடம் வடமராட்சி வலயம் நடாத்திய சதுரங்கச் சுற்றுப் போட்டியில்
  செல்வன் அருந்தவச் செல்வன் அபிராம்
  செல்வன் வியஸ்ரீ ஜினோசன்
  செல்வன் தங்கவேலு தேனுஜன்
  செல்வன் சுதாகரன் சுதன் ஆகியோர்
  வெற்றிபெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

## கடின பந்து

கடந்தவருடம் எமது கல்லூரி 17 வயதின் கீழ் கடின பந்து அணியினர் யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, யா/ விக்கினேஸ் வராக் கல்லூரி, வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், மற்றும் மன்னார் சென்சேவியர் கல்லூரிகளுடன் போட்டியிட்டு பல சாத னைகளைப் புரிந்துள்ளது. இப்போட்டிகளில் செல்வன் சிவலிங்கம் நிலக்ஜன் அபார ஆட்டம் ஆடியுள்ளார்.

## மெய்வல்லுனர் போட்டி

செல்வன் இரத்தினசிங்கம் நிமலேந்திரா - குண்டு போடுதல் அகில இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடாத்திய மெய்வல்லுநர் போட்டியில் தேசிய மட்டத்தில் 1ம் இடத்தையும் இதே வருடம் Srilanka Open Meet இல் 9ம் இடத்தையும் பெற்றுள்ளார்.

கடந்த வருடம் இதே வீரர் மாவட்டம், மாகாண மட்டம் பாடசாலைகள் மெய்வன்மைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் மாகாணத்தில் புதிய சாதனையைப் (13.67m) பதிவாக்கியுள்ளார். அவர் தொடர்ந்து தேசிய மட்ட மெய்வன்மைப் போட்டியில் 2ம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை எமது கல்லூரிக்கு மிட்டுத்து தந்துள்ளார்.

இவ்வருடம் யூன் மாதம் இலங்கையில் நடைபெற்ற கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் இலங்கை மெய்வல்லுனர் குழாமில் வடமாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட ஒரேயொரு ஆண் போட்டியாளர் செல்வன் இரத்தினசிங்கம் நிமலேந்திரா ஆவார். இவர் சர்வதேச மெய்வல்லுனர் தர வரிசையில் தெரிவு செய்யப்பட்டதும் எமது கல்லூரி வரலாற்றில் முதல் மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### என்றும் நன்றிக்குரிய கல்லூரியின் நிரந்தர நிதியங்கள்

1. தொழிலதிபர் நெல்லியடி திரு. ந. பாஸ்கரன் புலமைப் பரிசில் நிதியம். க.பொ.த (உ/த) பரீட்சையில் கணிதத் துறையில் அதிசிறந்த மாணவருக்குரியது.

02. உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கல்லூரியின் பழைய மாணவன் திரு. அப்புத்துரை சிவரஞ்சன் அவர்களின் புலமைப்பரிசில் நிதியம் க.பொ.த(உ/த) இல் வர்த்தகத்துறை, கலைத் துறையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக் குரியது.

03. ஆசிரியர் கழகத்தின் புலமைப்பரிசில் நிதியம் கலை - வர்த் தகத்துறையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர் களுக்குரியது.

04. எமது கல்லூரியின் ஓய்வுநிலைப் பிரதி அதிபர் திரு. ஞ. தங்கராஜா அவர்களின் மகன் அமரர் தங்கராசா ரமணன் ஞாபகார்த்த புலமைப் பரிசில் நிதியம் க.பொ.த (சா/த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்ற மாணவர்களுக் குரியது.

05. G.T.I சேமிப்பிலிருந்து பெறப்பட்ட நிதியம் கல்லூரியின் அபிவிருத்திக்குரியது.

06. எமது கல்லூரியின் ஓய்வு நிலை கணித ஆசிரியர் திருமதி செல்லப்பாக்கியம் கிருஷ்ணபிள்ளை அவர்களின் புலமைப்பரிசில் நிதியம்

07. பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப் பிடமாகவும் கொண்ட ஹாட்லிக் கல்லூரியின்பழைய மாணவன் கணித ஆசிரியர் திரு, V.S தங்கவேல் தனது அன் புக்குரிய நண்பன் திரு,க. தர்மலிங்கம் அதிபராக இருப்ப தையிட்டு வறிய பிள்ளைகளுக்காக வழங்கப்பட்ட நிதியம்

08. கனடாவில் வசிக்கும் இமையாணன் மேற்கைச் சேர்ந்த கல்லூரியின் பழைய மாணவன் செல்லையா பாலசுந்தரம் அவர்களின் நிதியம்

09. அவுஸ்ரேலியாவில் வசிக்கும் மாணிக்கம் சுரேந்திரன் அவர்களின் க.பொ.த (உ/த) இல் கல்வியில் உயர்நிலை காட்டும் மாணவர்களுக்கான நிதியம்

10. லண்டனில் வசிக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி பீற்றர் ராஜன் அவர்களின் நிதியம் வறுமை நிலையிலுள்ள பிள்ளைகளின் கல்வியை உயர்த்துவதற்கானது

11. எமது கல்லூரியின் புகழ் பூத்த முன்னைநாள் ஆசிரியர் பண்டிதர் வேலுப்பிள்ளை நினைவாக அவரின் மகன் கல்லூரியின் பழைய மாணவன் திரு.வே. ஞானேஸ்வரன் அவர்களால் வழங்கப்படும் நிதியம். இது உயர்கல்விக்கான நீண்ட காலத்திட்டமாகும்.

12. எமது கல்லூரிக்கும் எமது சகோதர கல்லூரிக்கும் எமது கல்லூரியின் பழைய மாணவரா அனுவிந்தன் கந்தையாவின் மகன் திரு. பீற்றர் கந்தையா (சட்டத்தரணி) பீற்றர் கந்தையாவின் மகள் கெயிற்றி ஆகியோர் வருகைதந்து கல்லூரியில் பல விடயங்களை அறிந்து இரு கல்லூரிகளுக்குமாக ஒரு மினிபஸ் அன்பளிப்புச் செய்தமை மற்றும் கல்லூரிக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் கையளித்தமை என்பன பாராட்டுதலுக்கான விடயமாகும்.

13. ஓய்வு நிலை ஆசிரியர் திரு.நு. பஞ்சநாதன் ஆசிரியர் அவர்கள் பழைய மாணவர் சங்கத்தில் இட்டுவைத்துள்ள நிதியத்தில் இருந்து முன்னாள் அதிபர் திரு. K.T. ஜோன் ஞாபகர்த்தமாக மாணவதலைவனுக்கு வழங்கப்படும் பரிசு.

**2012 பரிசளிப்பு விழாவுக்கு அன்பளிப்பு வழங்கியோர்.**

1. திரு. வே. தி. செல்வரத்தினம்
   Acting Director steep Institute, (முன்னாள் வடமாகாணக் கல்விமைச்சின் பிரதிச்செயலரும், யாழ் மாவட்ட மேலதிக மாகாகணக் கல்விப்பணிப்பாளரும்)
   க.பொ.த. உயர்தர சிறந்த பெறுபேற்று மாணவருக்கான நினைவுப் பரிசில்கள்

2. திரு. வே. ஞானேஸ்வரன்
   A/L கலைப்பிரிவு கலைப்பிரிவு மாணவர்களுக்கான கொடுப்பனவு ரூபா. 10.000/=

3. திரு. T. சுதர்சன் (கிராம சேவையாளர்)
   க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான கொடுப்பனவு ரூபா 2500ஃஸ்ரீ

4. திரு. ஆ. பிரபானந்தன் ஆசிரியர்
   (அவரின் அன்புக்குரிய துணைவியார் அமரர் திருமதி நினைவாக பவானி நிதியமூலம் 10,000/=)

## நன்றிகள்

இன்றைய எமது கல்லூரியின் பரிசளிப்பு விழாவிற்கு வருகை தந்து சிறப்பித்த அனைத்துப் பிரமுகர்களுக்கும் கல்லூரிச் சமூகத்தின் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*This is our School*
*Make me proud of it*
*Make it proud of me.*

திரு. க. தருமலிங்கம்
(அதிபர்)

# கல்லூரிக் கீதம்

இராகம் : கல்யாணி தாளம் : ஆதி

**பல்லவி**

வாழிய வாழிய வாழியவே - உடுப்பிட்டி
அமெரிக்கன் மிஷன் கல்லூரி - வாழியவே

**அனுபல்லவி**

ஏழிசை போலவும் இன்றமிழ் போலவும்
இசைபல திசைதொறும் இசைவுற - வாழிய

**சரணம்**

ஓது கலைத்துறை யோடுவிஞ் ஞானமும்
ஓங்கு முயிர்நலந் தாங்குமெய்ஞ் ஞானமும்
நாத இசையொடு நாங்கள் சமூகமும்
நாடும் வளம்பெறப் பீடும் பெருக்கி - வாழிய

உத்தம ஒழுக்கமும் உண்மை விழுப்பமும்
உயிரினும் மேலாய் உன்னு தகவதும்
சுத்த மனத்தொடு தொண்டுசெய் ஊக்கமும்
சோம்பலில் லாவுழைப் போம்பலும் பெருக்கி - வாழிய

தன்னலம் நீக்கி இன்னலைப் போக்கித்
தாய்திரு நாட்டினுக் காய்த்தினம் வாழ்ந்திடும்
உன்னத வீரரை ஓய்விலா தாக்கி
ஊழிதொ றூழி ஊழிதொ றூழி - வாழிய

Noble Printers, Jaffna.0212220386